வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 64 of 2016

வழக்கு சாட்சி - PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கணேசன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சின்னப்பன் | வயது | : | |
| கிராமம் | : | சாமி கவுண்டம்பாளையம் | | | |
| தாலுக்கா | : | பல்லடம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05.11.2025.

(எதிரிகள் ஆஜர்.).

**முதல் விசாரணை :** **நாள் : 05.11.2025.**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விசை தறி தொழில் செய்து வருகிறேன். கடந்த 16.09.2015 ஆம் இரவு 9.00 மணியளவில் நான் சொந்த வேலையாக வெளியில் சென்று விட்டு அதிகாலை 3.30 மணியளவில் நான் வீட்டுக்குதிரும்ப வந்தபோது எனது பெரியப்பா மகன் வேலுச்சாமி அவர் வீட்டுக்கு முன்பாக நின்றுக்கொண்டிருந்தபோது சத்தப்பபோட்டுக்கொண்டிருந்தார். நான் என்ன என்று விசாரித்தபோது அவர் வீட்டின் முன் பக்க கதவை இரண்டு நபர்கள் வந்து உடைத்துவிட்டதாக சொன்னார். அக்கம் பக்கத்தில் பார்த்தோம் யாரும் இல்லை . வீட்டிற்கு வந்தபோது என் அண்ணன் மனைவி கலாமணி அவருடைய மகள் சரண்யா மற்றும் ரவிக்குமார் வீட்டிற்கு வெளியே வந்தார்கள். அவர்களிடம் விசாரித்தபோது அவர்களின் வீட்டின் கதவை உடைக்கப்பட்டதாக சொன்னார்கள். அவர்கள் வீட்டில் நிறுத்தி இருந்த என்னுடைய TVS Suzuki max 100 TN 39 M 1015 என்ற இருசக்கர வாகனத்தை காணவில்லை. சுத்தி பார்த்தப்போது குடோன் பின்புறம் உள்ள காட்டுப்பகுதியில் என்

இருசக்கர வாகனம் பூட்டிய நிலையில்கிடந்தது.

2) வண்டி பூட்டி இருந்ததால் தூக்க முடியவில்லை. மறுநாள் ரவிக்குமார் போலீசில் புகார் கொடுத்தார். பகல் 1.00 மணியளவில் போலீசார் வந்து விசாரித்தார்க.ள நான் என் வண்டியை அடையாளம் காண்பித்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1)ரவிக்குமார் எனக்கு என்ன உறவு என்றால் அவர் என் பெரியப்பாவின் மகன் ஆவார். ரவிக்குமார் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த போது உடன் சென்றேனா என்றால்இல்லை. அவர் எத்தனை மணயளவில் புகார் கொடுக்க சென்றார் என்றால் காலை 7.00 மணியளவில். போலீசார் விசாரிக்கும்போது யாரோ இரண்டு நபர்கள் வந்து கதவை உடைத்தார்கள் என்று சொல்லி யுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது தவறு போலீசார் விசாரணையில் யாரோ வீட்டின் முன் வாசலில் வந்தார்கள் என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எப்போதும் வண்டியை நிறுத்தும்போது சைட் லாக் போடுவது வழக்கம் என்றால் சரிதான். எனது இருச்சக்கர வாகனத்தை வேலுச்சாமிக்கும் வீட்டின் முன்பாக நிறுத்தியது அவர்களுக்கும் ரவிக்குமாருக்கும் தெரியுமா என்றால் தெரியும். நான் சொல்வதை போல் அதிகாலை 3.30 மணியளவில் நிறுத்தவில்லை என்றும் இரவு 9.00 மணிக்கு நிறுத்திவிட்டேன் என்றால் சரிதான். அதிகாலை 3.30 மணிக்கு நிறுத்திவிட்டேன் என்று சொல்வது தவறு என்றால் சரிதான். நான் சொல்வது எனது வாகனத்தை ரவிக்குமார் வீட்டின் முன்பாக வாகனத்தை நிறுத்தி இருந்தால் அவர் போலீசார் புகாரில் சொல்லி இருப்பார் என்றால் சரியல்ல. ரவிக்குமாருடைய வீடு குடோன்

எந்த திசையில் உள்ளது என்றால் கிழக்கு மேற்கு திசையில் உள்ளது. குடோனில் இருந்து இருசக்கர வாகனம் இருப்பதாக சொல்லப்பட்ட இடம் எது என்றால் மேற்கு பக்கம்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.11.05 18:34:26 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.